**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்.**

**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின்**
**ஆரம்பநிலை திறன்சார் சேவை வகையில் (PL 3) திறந்த ஆட்சேர்ப்பிற்கான**
**விண்ணப்பங்கள் கோரல் - 2026**

**1.0** **அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்பநிலை திறன்சார் சேவை வகைப் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**2.0** **அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை திறன்சார் சேவை வகைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகளின் வெற்றிடங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| தொடர் இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | 01 |
| 2. | உலோகப் புனைவாளர் (Fabricator - Metal) | 02 |
| 3. | உலை இயக்குநர் (Furnaceman) | 01 |
| 4. | பொதுப் பொருத்துநர் (Fitter - General) | 08 |
| 5. | கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | 04 |
| 6. | குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | 01 |
| 7. | இயந்திர இயக்குநர்- உற்பத்தி (Machine Operator - Production) | 01 |
| 8. | இயந்திர வல்லுநர் (Machinist) | 08 |
| 9. | மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist - Wood) | 01 |
| 10. | வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man) | 04 |
| 11. | வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | 01 |
| 12. | நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | 01 |
| 13. | பற்றவைப்பாளர் (Welder) | 05 |
| 14. | தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | 01 |
| | **மொத்தம்** | **39** |

**3.0 சம்பள அளவுத்திட்டம் :-**

3.1 சம்பளக் குறியீடு - PL 3 - 2025

3.2 சம்பள அளவுத்திட்டம் - ரூ. 42,780/- - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 = ரூ. 66,540/-

**குறிப்பு –** I) பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை III இன்படி 2027.01.01 வரை சம்பளம் செலுத்தப்படும். 2027.01.01 முதல் அட்டவணை II இன்படி சம்பளம் செலுத்தப்படும்.

II) இச்சம்பளத்திற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

3.3 சம்பள முறை :-

| **தரம்** | **ஆரம்பச் சம்பளப் படிநிலை** | **ஆரம்பச் சம்பளம் (ரூ.)** |
|---|---|---|
| III | படிநிலை 01 | ரூ. 42,780/- |
| II | படிநிலை 12 | ரூ. 48,220/- |
| I | படிநிலை 22 | ரூ. 53,670/- |
| விசேட | படிநிலை 32 | ரூ. 59,610/- |

**4.0 பதவியின் / பதவிகளின் தன்மை** : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரிமையுடையதும்

**5.0 ஆட்சேர்ப்புத் தரம்** : தரம் III

**6.0 மொழி மூலம்** : சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கிலம்

**7.0 ஒப்படைக்கப்படும் கடமைகள் :-**

| **அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்** | **கடமைகள்** |
|---|---|
| உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | வார்ப்புகளுக்குத் தேவையான அனைத்து வகையான உட்கருக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| உலோகப் புனைவாளர் (Fabricator - Metal) | மருத்துவமனைகளுக்கான உபகரணங்களைத் தயாரித்தல், உலோகத் தகடுகளைப் பயன்படுத்தி வடிவங்களை உருவாக்குதல், தகடுகளில் எழுத்துகளை வெட்டுதல், வர்ணம் பூசுதல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| உலை இயக்குநர் (Furnaceman) | அனைத்து வார்ப்புப் பணிகளுக்கும் தேவையான உலைகளை இயக்குதல், உலைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| பொதுப் பொருத்துநர் (Fitter - General) | அனைத்து கனரக/இலகுரக பொருத்துப் பணிகளையும் (பெரிய அளவிலான கதவுகள் தயாரித்தல் உட்பட) இயந்திரப் பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொண்டு மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | கனரக வாகனங்களை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல். |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | கடமைகள் |
|---|---|
| குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | காற்றழுத்த இயந்திரங்கள் மற்றும் கொதிகலன்களை இயக்குதல், சிறிய பராமரிப்புப் பணிகளைச் செய்தல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| உற்பத்தி இயந்திர இயக்குநர் (Machine Operator - Production) | ஆணி தயாரிக்கும் இயந்திரங்களையும் ஏனைய உற்பத்தி இயந்திரங்களையும் இயக்குதல், அவற்றின் சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் பணிகளுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| இயந்திர வல்லுநர் (Machinist) | போரிங், மில்லிங், லேத் மற்றும் டிரில்லிங் இயந்திரங்களை இயக்கி உலோகப் பாகங்களைத் தேவைக்கேற்ப இயந்திரப்படுத்துதல், சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist - Wood) | தச்சுப் பிரிவிலுள்ள அனைத்து இயந்திரங்களையும் இயக்குதல், அவற்றின் சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man) | வார்ப்புகளுக்கான வார்ப்பு அச்சுகளைத் தயாரித்தல், வார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | வார்ப்பு அச்சுகளுக்குத் தேவையான மர மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | PVC மற்றும் GI நீர்க்குழாய் அமைப்புகளை நிறுவுதல்; குளியலறை சுகாதார உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருத்திகளை நிறுவுதல்; நீர் வழங்கல் அமைப்புகளை இயக்குதல்; சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| பற்றவைப்பாளர் (Welder) | எரிவாயு, மின்சார, TIG மற்றும் MIG உபகரணங்களால் பித்தளை, அலுமினியம், இரும்பு, வார்ப்பிரும்பு மற்றும் துருப்பிடிக்காத எஃகு உட்பட அனைத்து பற்றவைப்புப் பணிகளையும் மேற்கொண்டு மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | மரத்தால் அனைத்து வகையான தளபாடங்களையும் தயாரித்தல், மெருகூட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |

**8.0 ஆட்சேர்ப்புத் தகைமைகள் :-**

**I). கல்வித் தகைமைகள்:**

I. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

II. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 28/2016 இன்படி உரிய துறையில் NVQ மட்டம் 03 அல்லது 04 திறனைப் பெற்றிருந்தால், I ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகள் பொருந்தாது.

**II). தொழிற்தகைமைகள்:** ஒவ்வொரு பதவிக்குமான கடமைகளுக்கேற்ப மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழில் தகைமையில் (NVQ) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

**ஒவ்வொரு பதவிக்கும் உரிய தொழிற்தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | தொழிற்தகைமைகள் |
|---|---|
| உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த சான்றிதழையும் பின்வரும் தொழிற்திறன் மற்றும் அனுபவச் சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.<br>II. விசேடப் பணிகளுக்கான உட்கரு வடிவங்களைப் பற்றவைத்தல் அல்லது வார்ப்பதற்குத் திட்டமிடத் திறன்.<br>III. பல அளவிலான மணல் உட்கருக்கள் மற்றும் வடிவங்களுக்கான வென்டிங் மற்றும் பேகிங் முறைகளில் அறிவு.<br>IV. உட்கரு மணல் கலவையைத் தயாரித்து, அடைத்து, வலுவூட்டி, காற்றோட்டம் அமைத்து, செம்மைப்படுத்தி உட்கருப் பெட்டியைத் தயாரிக்கும் திறன்.<br>V. ஒயில் சேண்ட் கலவையைத் தயாரித்து உட்கருக்கள் செய்யும் திறன்.<br>VI. இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகப் பணிகளுக்கான உலர் மணல், பசுமை மணல் மற்றும் சிறப்பு களிமண் உட்கருக் கலவைகளை உரிய விகிதத்தில் தயாரிக்கும் திறன்.<br>VII. லோம் மணலைப் பயன்படுத்தி குழாய் உட்கருக்கள் மற்றும் வார்ப்புரு ஆதரவுடன் உட்கரு வடிவங்களைத் தயாரிக்கும் திறன்.<br>VIII. அச்சு தயாரிப்பில் உயர்ந்த அறிவும் திறனும். |
| உலோகப் புனைவாளர் (Fabricator - Metal) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| உலை இயக்குநர் (Furnaceman) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த சான்றிதழையும் பின்வரும் திறன் மற்றும் அனுபவச் சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.<br>II. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) பிரிவுகளின் பல்வேறு உலோக/கலவைப் பாகங்களை உடைத்துப் பார்ப்பதன் மூலமோ வேறு முறைகளிலோ அடையாளம் காணும் திறன்.<br>III. இரும்பு அல்லாத உலோக உலைகள், குருசிபிள், குருசிபிள் இல்லா, எண்ணெய் எரிபொருள் உலைகள் மற்றும் கியுபோலா உலைகளை இயக்கி, பழுதுபார்த்து, பராமரிக்கும் திறன்.<br>IV. கியுபோலா உலைக்கான காற்றூட்டிகள், எரிப்பான்கள், தூக்கி, உலையில் பொருள் செலுத்தும் மற்றும் எடையிடும் உபகரணங்களை இயக்கும் திறன்.<br>V. உருகிய உலோக வெப்பநிலையை பைரோமீட்டர் மூலம் அளக்கும் அடிப்படை அறிவு. |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | தொழிற்தகைமைகள் |
|---|---|
| | VI. கியுபோலா உலையிலிருந்து வெளியேறும் உருகிய உலோகம் அல்லது புகையைப் பார்த்து வெப்பநிலையை மதிப்பிடும் அறிவு.<br>VII. உருக்கத்திற்கான எரிபொருள்-உலோக விகிதங்களையும் பொருளாதார ரீதியில் பயனுள்ள அளவுகளையும் அறிந்திருத்தல். |
| பொதுப் பொருத்துநர் (Fitter - General) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | I. அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் கனரக வாகன இயக்கத்தில் குறைந்தது பத்து (10) வருட அனுபவம்.<br>II. கனரக வாகன பராமரிப்பில் அடிப்படை அறிவு.<br>III. பிரைம் மூவர் டிரெய்லர் இயக்கும் திறன்.<br>IV. கிரேன் இயக்கும் திறன்.<br>V. லாரி மற்றும் போர்க்லிஃப்ட்( forklift) இயக்கும் திறன்.<br>VI. NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி. |
| குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழுடன் பின்வரும் தகைமைகள் வேண்டும்.<br>II. தொழிலுக்குரிய வரைபடங்களை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br>III. சூடான மற்றும் குளிர்ந்த நீர் விநியோக குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>IV. கழிவுநீர் வெளியேற்றக் குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>V. குளிரூட்டப்பட்ட நீர்(Chill Water) குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VI. நீராவி குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VII. அழுத்தப்பட்ட காற்றுக் குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VIII. தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>IX. நீர்ப்பம்பிகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல். |
| இயந்திர இயக்குநர் - உற்பத்தி (Machine Operator - Production) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழுடன் பின்வரும் திறன்களுக்கான சான்றுகள் வேண்டும்.<br>II. வரைபடங்களை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br>III. போல்ட் வடிவமைக்கும் இயந்திரத்தை இயக்கக்கூடியவராக இருத்தல்<br>IV. திரவ அழுத்த இயந்திரங்களை இயக்கக்கூடியவராக இருக்க இருத்தல்.<br>V. கொல்லர் தொழிலுக்கான வடிவமைக்கும் இயந்திரங்கள் மற்றும் அழுத்தும் இயந்திரங்களை இயக்கக்கூடியவராக இருத்தல்.<br>VI. இயந்திர வேகத்தைச் சீரமைத்தல்.<br>VII. உற்பத்தி இயந்திரங்களை இயக்கிப் பராமரித்தல்.<br>VIII. உற்பத்திப் பொருட்களின் விவரக்குறிப்புகளைச் சோதித்து உற்பத்தி அறிக்கைகள் தயாரித்தல். |
| இயந்திர வல்லுநர் (Machinist) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | தொழிற்தகைமைகள் |
|---|---|
| மரவேலை இயந்திர வல்லுநர்<br>(Machinist - Wood) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் உரிய அனுபவமும் வேண்டும்.<br>II. குறித்த தொழிலுக்கு தொடர்புடைய கருவிகள் மற்றும் இயந்திரங்களின் பராமரிப்பு தொடர்பாக சிறந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.<br>III. குறித்த தொழிலுடன் தொடர்புடைய அடிப்படை அறிவு மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள் தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.<br>IV. தொழிலுடன் தொடர்புடைய வரைபடம் / திட்டத்தை வாசித்து புரிந்துகொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>V. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்களில் (f) உட்பட குறைந்தபட்சம் 05 இயந்திரங்களை மிகக் குறுகிய காலத்திற்குள் திறம்பட இயக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>a. மோர்டைசிங் இயந்திரம் (Mortising Machine)<br>b. டெனனிங் இயந்திரம் (Tennoning Machine)<br>c. எளிய மோல்டிங் இயந்திரம்<br>d. சாண்டிங் இயந்திரம்<br>e. மரம் துளையிடும் / மர வேலைப்பாடு செய்யும் இயந்திரம்<br>f. மரத்தின் மேற்பரப்பை சமப்படுத்தி, தடிமனைக் குறைக்கும் இயந்திரம் |
| வார்ப்புத் தொழிலாளர்<br>(Foundry Man) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்.<br>II. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) உலோக வார்ப்புகளுக்கான மண் மற்றும் கலவைகளின் பொருத்தமான விகிதத்தைத் தீர்மானித்து, தேவையான வார்ப்பு அச்சுகளைத் தயாரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>III. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) உலோகங்களுக்கான பல்வேறு வகையான Core மற்றும் வார்ப்பு அச்சுகளைத் தயாரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>IV. லோம் மண்ணைப் பயன்படுத்தி வார்ப்பு அச்சுகளைத் தயாரிப்பது தொடர்பான அறிவு கொண்டிருக்க வேண்டும்.<br>V. வார்ப்பு அச்சுப் பெட்டி சட்டங்கள், உயர்த்திகள் மற்றும் அடித்தட்டுகள் போன்றவற்றைத் தயாரித்து, மேம்படுத்தி, பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>VI. உருக்கப்பட்ட உலோகத்தைப் பரிசோதித்து, வார்ப்பு அச்சுகளில் ஊற்றுவதற்கான சரியான நேரத்தைத் தீர்மானித்து, உதவியாளர்களை வழிநடத்தி வார்ப்புகளைப் பெறக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>VII. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) உலோக வார்ப்புகளில் பயன்படுத்தப்படும் chilling தொழில்நுட்பம் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும்.<br>VIII. உட்கரு தயாரித்தல் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும். |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | தொழிற்தகைமைகள் |
|---|---|
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்.<br>II. தொழிலுடன் தொடர்புடைய வரைபடங்களை வாசித்து புரிந்துகொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>III. பல்வேறு உலோகங்களுக்கான சுருக்க விதிகள் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.<br>IV. பல்வேறு உலோகங்கள் மற்றும் வார்ப்பு தயாரித்தல் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும்.<br>V. கோர் பிரிண்ட் பயன்படுத்தி, வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப வார்ப்பு மாதிரிகளை தயாரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>VI. அனைத்து வகையான வார்ப்பு மாதிரிகள் மற்றும் பல்வேறு சுருக்க அளவுகள் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும். |
| நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்:<br>II. தொழிலுடன் தொடர்புடைய வரைபடங்களை வாசித்து புரிந்துகொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>III. வீட்டு நீர்க்குழாய் அமைப்புகள் மற்றும் நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல், பழுதுபார்த்தல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.<br>IV. கழிவுநீர் வடிகால் அமைப்புகளைப் பொருத்துதல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.<br>V. வீட்டு கழிவுநீர் மற்றும் கழிவகற்றல் அமைப்புகளைப் பொருத்துதல், பராமரித்தல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.<br>VI. பல்வேறு வகையான குழாய்கள் மற்றும் உபகரணங்கள், குறிப்பாக எஃகு குழாய்கள், பொருத்துதல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். |
| பற்றவைப்பாளர் (Welder) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்:<br>II. தொழில் தொடர்பான வரைபடங்களை வாசித்து புரிந்துகொள்ளும் திறன்.<br>III. பல்வேறு மர வகைகள் மற்றும் அவற்றின் தரம், பயன்பாடு தொடர்பான அறிவு.<br>IV. பல்வேறு மர இணைப்புகள் மற்றும் அவற்றை உருவாக்கும் முறைகள் தொடர்பான அறிவு.<br>V. மரப் பொருட்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன்.<br>VI. மரப் பலகைகளால் மரப் பொருட்களைத் தயாரிக்கும் திறன்.<br>VII. மரக் கட்டைகள் மற்றும் பலகைகளால் மரப் பொருட்களைத் தயாரிக்கும் திறன்.<br>VIII. இயந்திரத்தில் செயலாக்கப்பட்ட மரம் மற்றும் பலகைகளால் மரப் பொருட்களைத் தயாரிக்கும் திறன்.<br>IX. இயந்திரங்கள், கருவிகள் மற்றும் Power Tools-ஐப் பராமரித்தல் மற்றும் கருவிகளைக் கூர்மைப்படுத்தும் திறன். |

**III). அனுபவம்:** அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் இரண்டு (02) வருட அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

**IV). உடற்தகைமை:** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

**V). ஏனையவை:**

I. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நற்குணமுடையவராக இருக்க வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்ப அறிவித்தல் / வர்த்தமானியில் குறிப்பிடப்படும் **2026.09.25** ஆம் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**9.0 வயது:** விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**10.0 ஆட்சேர்ப்பு முறை:** தொழில் செய்முறைப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**10.1.1 தொழில் செய்முறைப் பரீட்சை**

| பதவிப் பெயர் | வினாத்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| **உட்கரு தயாரிப்பாளர் (Core Maker)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. கோர் மணல் கலவையைத் தயாரித்து, அழுத்தி அமைத்து, காற்றோட்டம் மற்றும் உலோகப் பாய்ச்சல் வழிகளுடன் கோர் பெட்டியைத் தயாரித்தல்.<br>b. இரும்பு மற்றும் இரும்பு சாராத உலோக வேலைகளுக்குத் தேவையான கோர் மணல், பசை மற்றும் மேற்பூச்சுக் கலவைகளைச் சரியான விகிதத்தில் தயாரித்தல்.<br>c. சிக்கலான மற்றும் பல கோர்கள் கொண்ட வேலைகளில், தேவையான வார்ப்புருக்கள் மற்றும் அளவீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி கோர்களை அமைத்தல்.<br>d. எண்ணெய் மணல் கலவையைத் தயாரித்து, அதைப் பயன்படுத்தி கோர்களை உருவாக்குதல். | 01 மணித்தியாலம் | **100** | **40** |

| பதவிப் பெயர் | வினாத்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| **உலோகப் புனைவாளர் (Fabricator - Metal)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்<br>a. உலோகத்தை வெட்டுவதற்காக அடையாளமிடுதல்.<br>b. தயாரிக்கப்பட்ட உலோகப் பாகங்களை ஒன்றுசேர்த்தல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **உலை இயக்குநர் (Furnaceman)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. விவரக்குறிப்பின்படி தேவையான உலோகங்கள் மற்றும் சேர்மப் பொருட்களைப் பயன்படுத்தி உருக்கு உலையை முறையாக இயக்குதல்.<br>b. இரும்பு மற்றும் இரும்பு சாராத உலோகங்கள் மற்றும் உருக்கு உலைக்கான சரியான கோக் தரத்தை அடையாளம் காணுதல்.<br>c. உலோகங்களைச் சேர்த்து உருக்கி, கழிவுகளை அகற்றி, உருகிய உலோகத்தைப் பெற்று, உலையை நிறுத்தி வார்ப்பு செய்தல்.<br>d. .உருக்கு உலைக்குரிய காற்றூதிகள், எரிப்பான்கள், தூக்கி, மூலப்பொருள் செலுத்தும் மற்றும் எடை போடும் கருவிகளை இயக்குதல்..<br>e. பல்வேறு உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளை உடைத்தல் அல்லது பிற முறைகள் மூலம் அடையாளம் காணுதல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **பொதுப் பொருத்துநர் (Fitter - General)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. இயந்திர உபகரணங்களையும் டை பாகங்களையும் ஒன்று சேர்த்து நிறுவுதல்.<br>b. இயந்திரப் பராமரிப்பில் நல்ல அறிவு. | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. பயணிகள் பேருந்தை ஓட்டுதல்.<br>b. சரக்கு லொறியை ஓட்டுதல்.<br>c. போர்க்லிஃப்ட் இயந்திரத்தை இயக்குதல்.<br>d. கனரக வாகனப் பராமரிப்பில் அடிப்படை அறிவு. | 01 மணித் தியாலம் | **100** | **40** |

| பதவிப் பெயர் | வினா த்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| **குழாய் பொருத்துநர் (Pipe Fitter)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. சூடான மற்றும் குளிர்ந்த நீர் வழங்கல் குழாய்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>b. கழிவுநீர் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>c. குளிர்ந்த நீர் குழாய்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>d. நீராவிக் குழாய் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>e. அழுத்தக் காற்றுக் குழாய் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>f. தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>g. எரிவாயு வழங்கல் குழாய் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>h. நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **இயந்திர இயக்குநர் - உற்பத்தி (Machine Operator - Production)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. உலோக வடிவமைப்பு இயந்திரங்கள் மற்றும் அழுத்தி இயந்திரங்களை இயக்கி, தினசரி பராமரித்தல்.<br>b. போல்ட் தயாரிக்கும் இயந்திரங்களை இயக்கி, பராமரித்தல்.<br>c. திரவ அழுத்த இயந்திரங்களை இயக்கி, தினசரி பராமரித்தல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **இயந்திர வல்லுநர் (Machinist)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. லேத் இயந்திரப் பணிகளில் நல்ல அனுபவம் பெற்றிருத்தல்.<br>b. துளையிடுதல் மற்றும் அது தொடர்பான பணிகளில் நல்ல அனுபவம் பெற்றிருத்தல்.<br>c. லேத் மற்றும் துளையிடும் கருவிகளைக் கூர்மைப்படுத்துவதில் அனுபவம் பெற்றிருத்தல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |

| பதவிப் பெயர் | வினா த்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| **மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist - Wood)** | பாட அறிவு | கீழே குறிப்பிடப்பட்டுள்ள 06 மரவேலை இயந்திரங்களில், தடிமனை சமப்படுத்தும் இயந்திரம் உட்பட குறைந்தது 05 இயந்திரங்களை இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br><br>a. மோர்டைசிங் இயந்திரம். (Mortising Machine)<br>b. டெனனிங் இயந்திரம். (Tennoning Machine)<br>c. எளிய மோல்டிங் இயந்திரம்.<br>d. சாண்டிங் இயந்திரம்.<br>e. மர வேலைப்பாட்டு இயந்திரம்.<br>f. தடிமனை சமப்படுத்தும் இயந்திரம் | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. பச்சை மணல் அல்லது உலர் மணலைப் பயன்படுத்தி, இரண்டு அல்லது மூன்று பகுதிகளைக் கொண்ட நடுத்தர அளவிலான சிக்கலான வார்ப்பு அச்சை, இரும்பு அல்லது இரும்பு சாராத உலோகங்களுக்கு தயாரித்து, வார்ப்பு பரிசோதனைக்கு திருப்திகரமாகப் பயன்படுத்தல்.<br>b. இரண்டு அல்லது மூன்று பகுதிகளைக் கொண்ட வார்ப்பு அச்சைத் தயாரிக்க, பச்சை அல்லது உலர் மணலைச் சரியாகத் தயாரித்து, சிக்கலான அல்லது நடுத்தர அளவிலான இரும்பு அல்லது இரும்பு சாராத உலோக வார்ப்பு அச்சை உருவாக்குதல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. கோர் பிரிண்டைப் பயன்படுத்தி, வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப வார்ப்பு மாதிரியைத் தயாரித்தல்.<br>b. வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப எந்தவொரு வகையான வார்ப்பு மாதிரியையும் தயாரித்தல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |

| பதவிப் பெயர் | வினா த்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| **நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. வீட்டு நீர்க்குழாய் அமைப்புகளைப் புதிதாகப் பொருத்துதல், பழுதுபார்த்தல் மற்றும் நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல்.<br>b. கழிவுநீர் கடத்தல் அமைப்புகளைப் பொருத்துதல்.<br>c. வீட்டு கழிவுநீர் மற்றும் கழிவகற்றல் அமைப்புகளைப் பொருத்தி பராமரித்தல்.<br>d. பல்வேறு வகையான குழாய்கள் மற்றும் உபகரணங்கள், குறிப்பாக எஃகு குழாய்களைப் பொருத்துதல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |
| **பற்றவைப்பாளர் (Welder)** | பாட அறிவு | பின்வரும் நான்கு தொழிற்பிரிவுகளில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>**NVQ நிலை 4 – வில் பற்றவைப்பு**<br><br>a. ஆக்சி–அசிட்டிலீன் வாயு மூலம் எஃகு வெட்டுதல்.<br>b. சமநிலை நிலையில் எஃகு தகடுகளை கையேடு வில் முறையில் பற்றவைத்தல் (1G, 1F).<br>c. கிடைமட்ட நிலையில் எஃகு தகடுகளை கையேடு வில் முறையில் பற்றவைத்தல்.<br>d. செங்குத்து நிலையில் எஃகு தகடுகளை கையேடு வில் முறையில் பற்றவைத்தல் (3G).<br>e. மேல்நிலை முறையில் எஃகு தகடுகளை கையேடு வில் முறையில் பற்றவைத்தல் (4G).<br>f. சால்டரிங் மற்றும் பிரேசிங் செய்தல்.<br><br>**NVQ நிலை 4 – டிக் பற்றவைப்பு**<br><br>a. ஆக்சி–அசிட்டிலீன் வாயு மூலம் எஃகு வெட்டுதல்.<br>b. சமநிலை நிலையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல்.<br>c. கிடைமட்ட நிலையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல். | 01 மணித் தியாலம் | **100** | **40** |

| பதவிப் பெயர் | வினா த்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| | | d. செங்குத்து நிலையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல் (3G).<br>e. மேல்நிலை முறையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல் (4G).<br>f. அனைத்து நிலைகளிலும் எஃகு குழாய்களை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல் (6G). | | | |
| **தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture)** | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>a. மரப் பொருட்களுக்கான மதிப்பீடு தயாரிக்கும் திறன்.<br>b. மரப் பலகைகளால் மரப் பொருட்கள் தயாரிக்கும் திறன்.<br>c. மரக் கட்டைகள் மற்றும் பலகைகளால் மரப் பொருட்கள் தயாரிக்கும் திறன்.<br>d. செயலாக்கப்பட்ட மரம் மற்றும் பலகைகளால் மரப் பொருட்கள் தயாரிக்கும் திறன்.<br>e. இயந்திரங்கள், கருவிகள் மற்றும் மின்சாரக் கருவிகளைப் பராமரிக்கும் திறன். | 01 மணித் தியாலம் | **100** | **40** |

**10.1.2 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்** | **அதிகபட்சப் புள்ளிகள்** | புள்ளிகள் வழங்கும் முறை | **புள்ளிகள்** |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பொதுப் பரீட்சையைத் தவிர சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் 02 புள்ளிகள். | 06 |
| | | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்ற டிப்ளோமா அல்லது சான்றிதழ் நெறிகள்:<br>i. 03-06 மாதங்கள் - 04 புள்ளிகள்<br>ii. 06-12 மாதங்கள் - 08 புள்ளிகள்<br>iii. 12 மாதங்கள் அல்லது மேல்- 14 புள்ளிகள் | 14 |
| சேவை அனுபவம் | 40 | அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் ஒவ்வொரு வருட அனுபவத்திற்கும் 08 புள்ளிகள். | 40 |

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | புள்ளிகள் வழங்கும் முறை | புள்ளிகள் |
|---|---|---|---|
| பயிற்சி நெறிகளைப் பின்பற்றியிருத்தல் | 15 | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பொறியியல் துறையில் பயின்ற பயிற்சி நெறிகள்:<br>i. ஒரு மாதத்திற்குக் குறைவு -02 புள்ளிகள்<br>ii. 01-03 மாதங்கள் - 05 புள்ளிகள்<br>iii. 03-06 மாதங்கள் - 10 புள்ளிகள்<br>iv. 06 மாதங்களுக்கு மேல் - 15 புள்ளிகள் | 15 |
| பாடசாலைச் சாராத செயற்பாடுகள் | 20 | விளையாட்டுச் சான்றிதழ்களுக்கு: மாகாண மட்ட வெற்றிக்கு 05 புள்ளிகளும் அகில இலங்கை மட்ட வெற்றிக்கு 10 புள்ளிகளும் (ஒன்று அல்லது அதற்கு மேல்) வழங்கப்படும். பாடசாலை மாணவர் தலைவர் பதவிக்கு 05 புள்ளிகள் வழங்கப்படும். | 20 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | 05 | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும். | 05 |
| மொத்தம் | | | **100** |

குறிப்பு - பதவிக்குரிய அனுபவம் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியான **2026.10.23** அன்று செல்லுபடியாக இருக்க வேண்டும்.

**11.0** அரச சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றிருக்கக் கூடாது.

**12.0** விண்ணப்பத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகளைச் சரிபார்க்கும்போது விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் எந்த நிலையிலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் வழங்கிய தகவல் ஏதேனும் பொய்யானது எனப் பின்னர் தெரியவந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**13.0** விண்ணப்பம் குறிப்பிடப்பட்ட மாதிரி வடிவத்திற்கமையச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அறிவித்தலுடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவில்லாத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**14.0** விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியிலுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசின் நிரந்தர பதவியிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**15.0** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் தொழில் செய்முறைப் பரீட்சைக்கும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். எனினும், அவ்வாறு அழைப்பது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படாது. நேர்முகப் பரீட்சையின்போது அறிவித்தலுக்கமையத் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் அவர்களின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

**16.0** விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்
III. செல்லுபடியான கடவுச்சீட்டு

**17.0** இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுகுறித்த இறுதித் தீர்மானம் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் கூறப்பட்டுள்ள பொது விதிகளின்படி செயல்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

**18.0** விண்ணப்பிக்கும் முறை :-

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கமையப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை, கல்வித் தகைமைகள், தொழிற்தகைமைகள், சேவை அனுபவம், பயிற்சி நெறிகள் மற்றும் பாடசாலைச் சாராத செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2026 அக்டோபர் 23** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **"பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவ வீதி, கொலன்னாவ"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது மேல் மூலையில் **"ஆரம்பநிலை திறன்சார் சேவை வகையின் III ஆம் தரப் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2026"** எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பொறி. எஸ். என். பி. எம். பத்மசிறி
பணிப்பாளர் நாயகம்

2026 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி
அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ.

# மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

**<u>அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை திறன்சார் சேவை வகைப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2026</u>**

**<u>Recruitment to the posts in the Primary Skilled Service Category of the Department of Government Factory - 2026</u>**

விண்ணப்பிக்கும் மொழி மூலம்:

சிங்களம் - 2

தமிழ் - 3

ஆங்கிலம் - 4

(பொருத்தமான இலக்கத்தை கட்டடத்திற்குள் எழுதவும்)

பதவிக்குரிய தொடர் இலக்கம்

விண்ணப்பிக்கும் பதவி :- ..........................................................................................................
(ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

**1.** (அ) முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

..........................................................................................................................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

..........................................................................................................................................

(உதா: H. M. S. RATHNAYAKA)

(இ) முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்):

..........................................................................................................................................

**2.** (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

(ஆ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

(இ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில் / தமிழில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

**3.** தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | |

**4.** பால் : பெண் - 0 / ஆண் - 1 [ ]

(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

**5.** பிறந்த திகதி : வருடம்: [ | | | ] மாதம்: [ | ] திகதி: [ | ]

**6.** விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் : [ | ] மாதங்கள் [ | ] நாட்கள்: [ | ]

**7.** தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

**8.** கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

a. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை விபரங்கள

I. முதல் தடவை பெறுபேறுகள்

பரீட்சை இலக்கம்: ...............................................

வருடம் ...................... மாதம் ........................

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

II. இரண்டாம் தடவை பெறுபேறுகள்

பரீட்சை இலக்கம்: ...............................................

வருடம் ...................... மாதம் .......................

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

b. க.பொ.த. (உயர்தர) பரீட்சை விபரங்கள்

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ...............................................

II. பரீட்சை இலக்கம் : ...............................................

பெறுபேறுகள்

| பாடம் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

**9.** மேலதிக கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

| தொடர் இலக்கம் | நிறுவனம் | பாடநெறியின் பெயர் | கால எல்லை | சான்றிதழின் செல்லுபடித் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**10.** தொழிற்தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

| தொடர் இலக்கம் | நிறுவனம் | பாடநெறியின் பெயர் | NVQ மட்டம் | கால எல்லை | சான்றிதழின் செல்லுபடித் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**11.** பதவிக்குரியதாகப் பெற்றுள்ள சேவை அனுபவம்:

| தொடர் இலக்கம் | சேவைக் காலம் | | பதவி | பணியிடம் |
|---|---|---|---|---|
| | முதல் | வரை | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**12.** பாடசாலைச் சாராத செயற்பாடுகள்: ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**13.** தற்போது ஏதேனும் அரச நிறுவனத்தில் பதவி வகித்தால் அதன் விபரங்கள்:

I. பதவியும் தரமும் : .....................................................................

II. நியமனத் திகதி : .....................................................................

III. நிறுவனம் :.....................................................................

IV. ஓய்வூதிய உரிமையுள்ள நிரந்தர பதவியா .....................................................................

**14.** நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (பொருத்தமான கட்டத்தில் √ குறியிடவும்.)

ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

**15.** <u>விண்ணப்பதாரரின் உறுதிமொழி</u>

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என மரியாதையுடன் உறுதிப்படுத்துகிறேன். இதன் ஏதேனும் பகுதியை நிரப்பாமையால் மற்றும்/அல்லது தவறாக நிரப்பியதால் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்கிறேன். மேலும், அனைத்து பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கிறேன்.

(ஆ) நான் வழங்கிய இந்த உறுதிமொழி பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன் தகுதியற்றவராவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்றும் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்ட எந்தத் தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

(ஈ) கல்வி மற்றும் தொழிற்தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்துச் சமர்ப்பிக்கிறேன்.

திகதி: .................................. ..............................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**16. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்: (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ........................................................................................ எனும் திரு./திருமதி/செல்வி அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ................................ ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

திகதி: ......................................

....................................................

சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் பெயர்: ......................................................................................................................

பதவி : ......................................................................................................................

முகவரி : ......................................................................................................................

உத்தியோகபூர்வ முத்திரை : ......................................................................................................................

**குறிப்பு - விண்ணப்பம் வர்த்தமானி அறிவித்தலின் 14 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சான்றுப்படுத்தப்பட வேண்டும்.**

**17. அரச சேவை / மாகாண அரச சேவையில் பணிபுரிபவராக இருப்பின், நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ........................................................................................ எனும் திரு./திருமதி/செல்வி அவர்கள் இவ்வமைச்சு/திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபையில் .................................... பதவியில் பணிபுரிகிறார். அவர் மேற்படி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் இந்நிறுவனச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதைத் தெரிவிக்கிறேன்.

....................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் பெயர் : ..........................................................................................

பதவி : ..........................................................................................

பணியிட முகவரி : ..........................................................................................

உத்தியோகபூர்வ முத்திரை : ..........................................................................................